செய்தி வெளியீடு எண்: 850. நாள் : 1.10.2010.

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் இயந்திரங்களைப் பயன்படுத்தி மணல் அள்ளுவதை முழுமையாகத் தடை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று (30–9–2010) ஆணையிட்டதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இதுகுறித்து விரிவான அறிவுரைகள் தலைமைச் செயலாளர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, இயந்திரங்களைப் பயன்படுத்தி பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் மணல் எடுப்பவர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், மணல் அள்ள உபயோகிக்கப்படும் இயந்திரங்களும், வாகனங்களும் பறிமுதல் செய்யப்படும்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

* * * * *